# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 292/மா/2023**
**நாள்: 22.11.2023**

திரு. G. செந்தில்குமார்,
திருச்சிராப்பள்ளி . – முறையீட்டு மனுதாரர்

உதவி ஆணையர்,
வார்டு குழு அலுவலகம் – V,
திருச்சிராப்பள்ளி மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

திருச்சிராப்பள்ளி மாவட்டம், அரவனூர், மேலபாண்டமங்கலம், மேலத் தெரு, எண்.122 என்ற முகவரியில் வசிக்கும் திரு. G. செந்தில்குமார் என்பவரின் 9.8.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 14.08.2023–ல் பெறப்பட்டு 292/மா/2023 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரது முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

திருச்சிராப்பள்ளி மாவட்டம், அரவனூர், மேலபாண்டமங்கலம், மேலத் தெரு, எண்.122 என்ற முகவரியில் வசிக்கும் திரு. G. செந்தில்குமார் என்பவரின் 9.8.2023 நாளிட்ட மனுவில்:-

31.7.2013-ம் தேதி, சிறுசிறு சீர் அமைப்புக்கு மனு கொடுத்தும் பல தேதிகளில் மாநகராட்சிக்கு வாட்ஸ் ஆப் மூலம் தகவல் தந்தும் நடவடிக்கை எடுக்கவில்லை. குறிப்பாக 8வேது வார்டு கழிப்பிட பகுதியில் தெரு விளக்கு இல்லை; பொது கழிப்பிடத்தில் போட்டு உள்ள விளக்கு எரிவது இல்லை.

மாநகராட்சியால் இணைப்பு துண்டிக்கப்பட்டு கழட்டிய மின் இரும்பு கம்பம் எண்.K.A.W.60/13/22-ஐ மாற்றிட நடவடிக்கை இல்லை. மேலும் ஆரம்ப சுகாதார நிலையம், ரேஷன் கடை, சமுதாய கூடம் இவற்றை காணொலி மூலம் திறந்தும் பொது மக்கள் பயன்பாட்டுக்கு வரவில்லை. இத்துடன் இணைத்து உள்ள 31.7.2023-ம் தேதியிட்ட கோரிக்கைகள் எதுவும் சரி செய்யப்படவில்லை. எனவே இக்கோரிக்கைகள் மீது விரைந்து நடவடிக்கை எடுக்க தங்களுக்கு இம்மனு அனுப்பப்படுகின்றது. குறிப்பாக குடிநீர் இணைப்பு ஏற்படுத்தி தரவும், 31.7.2023-ம் தேதி நான் அனுப்பிய கோரிக்கைகளை விரைந்து நடவடிக்கை எடுக்கவும் வேண்டுகின்றேன் என தெரிவித்துள்ளார்.

2. இம்முறைமன்ற கடித நாள் 27.09.2023 வாயிலாக திருச்சிராப்பள்ளி மாநகராட்சி உதவி ஆணையரிடமிருந்து இம்மனுமீது அறிக்கை கோரப்பட்டது.

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி உதவி ஆணையர் தன்னுடைய 10.11.2023 நாளிட்ட கடிதத்தில் "கும்பகோணம் மாநகராட்சிக்கு பணி மாறுதல் செய்து உத்தரவிட்டுள்ளதை தொடர்ந்து, 15.11.2023 முற்பகல் முதல் பணியில் சேரவேண்டி இருப்பதால், நேரடி விசாரணைக்கு என் சார்பாக இளநிலை பொறியாளர் திரு. பி. கே. ரவிக்குமார் என்பவர் உரிய ஆவணங்களுடன் ஆஜராகி உரிய பதிலினை சமர்ப்பிப்பார் என்று தெரிவித்துள்ளார்".

3. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 15.11.2023 அன்று நேரடி விசாரணைக்கு வருமாறு 6.11.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

மனுதாரர் 15.11.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகவில்லை.

4. திருச்சிராப்பள்ளி மாநகராட்சியின் இளநிலைப் பொறியாளர் 15.11.2023 அன்று நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:

"மனுதாரார் இம்முறை மன்றத்தில் அளித்துள்ள புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள பணிகள் கீழ்கண்டவாறு செய்து முடிக்கப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தை தெரிவித்து, இது தொடர்பான புகைப்பட நகல்களை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்.

| வரிசை எண் | மனுதாரர் தெரிவித்துள்ள புகார் | எடுக்கப்பட்ட நடவடிக்கை |
|---|---|---|
| 1 | திருச்சி மாநகராட்சி 8வது வார்டு பகுதியில் கழிப்பிடம் செல்லும் பாதையில் தெருவிளக்கு அமைத்தல். | தெருவிளக்கு அமைக்கப்பட்டுவிட்டது. |
| 2 | அரவனூர் தன்னஸ் அப்பன் கோவில் அருகே சின்தடிக் டேங்க் அமைத்தல். | தற்போது அமைக்கப்பட்டு வருகிறது. |
| 3 | னூரில் உள்ள சமுதாய கூடத்தை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தல். | சமுதாயக் கூடம் பழுதுபார்க்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு விடப்பட்டது. |
| 4 | திருச்சிராப்பள்ளி 8வது வார்டு மேலத்தெருவில் தேங்கும் கழிவு நீரை அகற்றுதல். | மழைநீர் வடிகால் கட்டப்பட்டு அங்கு கழிவு நீர் தேங்காமல் இருக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. |
| 5 | திருச்சிராப்பள்ளி 8வது வார்டு மேலத்தெருவில் குடிநீர் குழாய் அமைத்தல். | விண்ணப்பம் அளித்ததன் பேரில், மூப்பு பட்டியலின்படி (Seniority wise) குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டு வருகிறது. |
| 6 | பசுமை மரக்கன்றை வேலியுடன் அமைத்தல். | திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் மரக்கன்றுகள் வேலியுடன் பல இடங்களில் அமைக்கப்பட்டு வருகிறது. |

| | | |
|---|---|---|
| 7 | தெருநாய்களை கட்டுப்படுத்துதல் | தெரு நாய்களை பிடித்து, அவற்றிற்கு இனப்பெருக்க தடை செய்தும், அவற்றிற்கு தடுப்பூசி செலுத்தி விடப்படுகின்றன |

**5. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மற்றும் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி இளநிலைப் பொறியாளர் வாக்குமூலம் மற்றும் புகைப்படம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் பின்வரும் விவரங்கள் தெரியவருகின்றன.**

மனுதாரர் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி 8வது வார்டு அரவனூர் பகுதியில் கழிப்பிடம் செல்லும் பாதையில் தெருவிளக்கு இல்லை என்றும், துண்டிக்கப்பட்ட மின்விளக்கு கம்பம் பொருத்தவில்லை என்றும், ஆரம்ப சுகாதார நிலையம், ரேஷன் கடை, சமுதாய கூடம் ஆகியவை காணொளி மூலம் திறந்தும் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு வரவில்லை என்றும், மேலத் தெருவில் மழைநீர் வாய்க்கால் இல்லை என்றும், மேலும் குடிநீர் குழாய் இணைப்பு அளிக்கப்படவில்லை என்றும், தங்கள் பகுதியில் சுமார் 200 தெரு நாய்கள் சுற்றி திரிவதாகவும் அதனை கட்டுப்படுத்தவும், மேற்கண்ட கோரிக்கைகளை நிறைவேற்ற திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்கு உத்திரவிடுமாறு கோரியுள்ளார்.

மனுதாரர் தன்னுடைய மனுவில் குறிப்பிட்ட பணிகள் தொடர்பாக திருச்சிராப்பள்ளி மாநகராட்சி இளநிலைப் பொறியாளர் பின்வரும் விவரங்களை தன்னுடைய வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

| வரிசை எண் | மனுதாரர் தெரிவித்துள்ள புகார் | எடுக்கப்பட்ட நடவடிக்கை |
|---|---|---|
| 1 | திருச்சி மாநகராட்சி 8வது வார்டு பகுதியில் கழிப்பிடம் செல்லும் பாதையில் தெருவிளக்கு அமைத்தல். | தெருவிளக்கு அமைக்கப்பட்டுவிட்டது. |
| 2 | அரவனூர் தன்னாசி அப்பன் கோவில் அருகே சின்தடிக் டேங்க் அமைத்தல் | தற்போது அமைக்கப்பட்டு வருகிறது. |
| 3 | அரவனூரில் உள்ள சமுதாய கூடத்தை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தல். | சமுதாயக் கூடம் பழுதுபார்க்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு விடப்பட்டது. |
| 4 | திருச்சிராப்பள்ளி 8வது வார்டு மேலத்தெருவில் தேங்கும் கழிவு நீரை அகற்றுதல். | மழைநீர் வடிகால் கட்டப்பட்டு அங்கு கழிவு நீர் தேங்காமல் இருக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. |
| 5 | திருச்சிராப்பள்ளி 8வது வார்டு மேலத்தெருவில் குடிநீர் குழாய் அமைத்தல். | விண்ணப்பம் அளித்ததன் பேரில், மூப்பு பட்டியலின்படி (Seniority wise) குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டு வருகிறது. |
| 6 | பசுமை மரக்கன்றை வேலியுடன் அமைத்தல். | திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் மரக்கன்றை வேலியுடன் பல இடங்களில் அமைக்கப்பட்டு வருகிறது. |
| 7 | தெருநாய்களை கட்டுப்படுத்துதல். | தெரு நாய்களை பிடித்து, அவற்றிற்கு இனப்பெருக்க தடை செய்தும், அவற்றிற்கு தடுப்பூசி செலுத்தி விடப்படுகின்றன. |

மேற்கண்ட பணிகள் குறித்தான புகைப்பட நகல் மற்றும் ஆவணங்களையும் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி இளநிலைப் பொறியாளர் இம்முறைமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார்.

மேலும் மனுதாரர் 14.11.2023 நாளிட்ட கடிதத்தில் தனக்கு உடல் நலம் ஒத்துவராதக் காரணத்தினால் தன்னால் வருகை தர இயலாது என்று தெரிவித்து தன்னுடைய மேல்முறையீட்டு மனுவை பரிசீலனை செய்து தர நடுவம் உத்திரவிட்டு முறையீட்டு மனுவை முடித்து தர வேண்டுகிறேன் என்று கோரியுள்ளார்.

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி இளநிலைப்பொறியாளர் இம்முறைமன்றத்திற்கு அளித்துள்ள வாக்குமூலம், புகைப்பட நகல் மற்றும் ஆவணங்களை ஆய்வு செய்ததில் மனுதாரரின் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டுள்ளதாக தெரிகிறது. எனவே, திருச்சிராப்பள்ளி மாநகராட்சி இளநிலைப்பொறியாளரின் அறிக்கையினை ஏற்றும், திரு. G. செந்தில்குமார் அவர்கள் அளித்த 9.8.2023 நாளிட்ட புகார் மனு மீது மேல்நடவடிக்கை எடுக்க அவசியம் எழவில்லை என்று இம்முறைமன்றம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2023-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 22-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. G. செந்தில்குமார்
   122, மேலத் தெரு, மேல பாண்ட மங்கலம்,
   அரவனூர், திருச்சி – 620 102.
2. ஆணையர்,
   திருச்சிராப்பள்ளி மாநகராட்சி,
   பாரதிதாசன் சாலை, கண்டோன்மெண்ட்,
   திருச்சிராப்பள்ளி.
3. உதவி ஆணையர், (ஆணையர் வழியாக)
   வார்டு குழு அலுவலகம்-V,
   புதூர், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி,
   திருச்சி – 620 017.
4. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   சென்னை – 600 028.
5. இணை இயக்குநர் ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   சென்னை – 600 028.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

கண்காணிப்பாளர்